26 ஆகஸ்ட்டு 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 21ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

**அஞ்சாதீர், நாம் மரியாளோடு கிறிஸ்துவிற்குச் சொந்தமானவர்கள்.**

## தேர்வு செய்யப்பட வேண்டும்

இன்றைய வாசகங்களில், தேர்வு செய்யும்படி மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். செக்கேமில் யோசுவா இஸ்ராயேலின் எல்லாக் குலங்களையும் ஒன்று கூட்டினார். கூடிய மக்களுக்கு அவர் சவால் விடுக்கிறார்.: “யாருக்கு ஊழியம் செய்ய முடிவு செய்கிறீர்கள்” என வினவினார். தங்களுக்கு



Image: ©123rf.com

அனைத்தையும் செய்து தரும் கடவுளுக்கே ஊழியம் செய்யப்போவதாக மக்கள் பதில் அளிக்கின்றனர். கடவுளுக்கு விசுவாசமாக இருந்தால் ஏற்படும் விளைவுகளை எடுத்துக்கூறி, உறுதியோடு கடவுளுக்கே ஊழியம் செய்வோம் என மக்கள் அறிக்கையிட செய்கிறார், யோசுவா.

நற்செய்தி வாசகத்திலும், இயேசுவின் சீடர்களும் தேர்வு செய்யும்படி அழைக்கப்படுகின்றனர். வாழ்வளிக்கும் அப்பமான இயேசுவை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்ற இக்கட்டான நெருக்கடிக்கு சீடர்களில் பலர் தள்ளப்பட்டனர். வேத நித்தனை என யூதர்கள் கருதிய மற்றொரு சிக்கல் சீடர்களுக்கு உண்டு, “முன்பு வந்த இடத்திற்கு திரும்பச் செல்வேன்” என இயேசு கூறியது யூதர்களுக்கு தேவ நித்தனையாக தோன்றியது. இயேசுவின் கேள்விக்கு இரண்டு பதில்கள் உண்டு. அவற்றில் ஒன்றை பேதுரு தேர்வு செய்தார். எல்லா இடையூறுகளுக்கும் மத்தியில் இயேசுவை வெளிப்படையாக தேர்வு செய்தார். வாழ்வளிக்கும் வார்த்தை இயேசுவே என அவர் பிரகடனம் செய்தார். வேறு சில சீடர்கள், இயேசுவை விட்டு விலக முடிவு செய்தனர். இயேசுவின் வார்த்தையை ஏற்றுக் கொள்ள மனமில்லாதவர்கள், அவரைப் பின்தொடரத் தயாராகயில்லை.

திருமணத் தம்பதியினரும் தினத்தோறும் தேர்வு செய்கின்றனர். தினத்தோறும் அவர்கள் செய்யும் தேர்வு, அவர்கள் இருவருக்கிடையில் நெருக்கத்தை அதிகரிக்கிறதா இடைவெளி அதிகரிக்கதா என்பதை உறுதிச் செய்யும். கணவன் தமது மனைவியோடு கூடியிருப்பது போல், கிறிஸ்துவர்களாகிய **நாம் இயேசுவோடு அணுக்கமாக பிணைக்கப்பட்டுள்ளோம்.** தினத்தோறும் நாம் செய்யும் தேர்வு, இயேசுவோடு அணுக்கமாக கொண்டு செல்லும் அல்லது விலகிச் செல்லும். நமது தெய்வீகத் தாய் மரியாள், வாழ்நாள் முழுவதும் கடவுளை கீழ்படிந்து இருக்க தேர்வு செய்தாள். அவளை நாம் பின்பற்றுவோமாக! ✝

> நம்மை நாமே குற்றஞ்சாட்டுவோம் அல்லது மன்னித்து விடுவோம்.
>
> - புனித ஜோன் வியான்னி

**வாரம் ஒரு வசனம்**

**நாம் இயேசுவோடு அணுக்கமாக பிணைக்கப்பட்டுள்ளோம்**

INTERNAL CIRCULATION ONLY
BUL 34/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 செப்டெம்பர் (புரட்டாசி) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவில் எல்லோருக்கும் மதிப்பளித்து உலகத்தோடு நட்புறவு கொள்ளுவோம்***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 21ஆம் ஞயிறு** — **சனி 25-08-2018 - ஞாயிறு 02-09-2018**

யோசுவா: 24: 1-2a, 15-17, 18b — தி.பா: 33: 2-3, 16-17, 18-19, 20-21, 22-23 — எபே: 5: 21 - 32 — யோவான்: 6: 60 - 69

**"ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்" - திபா 33**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 25 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித ஜோஆன்) | விவிலியக் கல்வி (Bible Knowledge) : மதியம் 2.30 மணி<br>ஆலய மண்டபம் மேல் அறை<br>**காலை 10.00 மணிக்கு விஷேட திருமுழுக்கு** |
| ஞாயிறு | 26 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (திருவழிபாட்டுக் குழு<br>திருப்பலி (ஆ) (புனித கிறிஸ்தோபர்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் )<br>**திருவிழா திருப்பலி மாலை 4.30 மணி புனித அகுஸ்தீனார் சிற்றாலயம் தித்தி (சீ)** |
| திங்கள் | 27 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 28 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 29 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 30 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 31 | ***சுதந்திரதின திருப்பலி : காலை 8.30 மணி : செபமாலை, நவநாள் தொடர்ந்து திருப்பலி காலை 9.00 மணி*** | | |

**பொதுக்காலம் 22ஆம் ஞயிறு**

இ.ச: 4: 1-2, 6b-8 — தி.பா: 14: 2-3ab, 3cd-4ab, 5 — யாக்கோபு: 1: 17-18, 21b-22, 27 — மாற்கு: 7: 1-8, 14-15, 21-23

**"ஆண்டவரே உம் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் யார்?" - திபா 14**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 01 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித மரியா) | விவிலியக் கல்வி (Bible Knowledge) : மதியம் 2.30 மணி<br>ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 02 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (பாடல் குழு)<br>திருப்பலி (ஆ) (ம.கல்வி படிவம் 1)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2018 ஆகஸ்ட் (ஆவணி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1) **பங்கு ஆலய காணிக்கை**:
**அ)** 18/19 **ஆகஸ்ட் ரிம்**:8,429.85
**ஆ) அன்னைமரியாளின் விண்ணேற்றம்** (15/8) **ரிம**:2,928.25
**தித்தி**: **ரிம**:79.00
**இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!**

**2) மினவுதல் தேவாலய ஆங்கிலப் பாடல் குழுவினர் (ஞாயிறு 9 மணி)பாட ஆர்வமுள்ளவர்களை அழைக்கின்றார்கள்.**
**தொடர்புக்கு**: **சூசன்** 017- 8846 604

**3) இரத்த தான முகாம்**
**நாள்**: 02-09-2018 **காலை** 10.00 - **பகல்** 2.00 **வரை**
**இடம்**: **காடோங் வேளாங்க**ண்ணி **அன்னை சிற்றாலயம்**
**தொடர்புக்கு**: **கிறிஸ்டோபர்** 010 231 2582

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்**
**பீட்டர் ஜோர்ஜ் ஆரோக்கியசாமி** (**இறப்பு** 19-08-2018)
சந்தியா பெரியநாயகம் **(இறப்பு 24-08-2018)**
**முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!**

**மரித்தோர் மற்றும் அடக்கம் - சிகாமட் கல்லறை**

- **மினவுதல் தேவாலய** பங்கின் கீழ் இருக்கும் கத்தோலிக்க குடும்பத்தில் இறப்பு ஏற்பட்டால், அதற்கான இறப்பு திருப்பலி இறந்தோரின் குடும்பத்தினரால் மட்டுமே வந்து பதிவு செய்ய முடியும். இறப்பு ஏற்பாட்டு குழுவினர் இதை செய்ய அனுமதியில்லை.
- **சிக்காமட் கல்லறையில்** இடம் பதிவு செய்ய குடும்பத்தினர் சிரம்பான் நகராண்மைக் கழகத்தில் பதிவு செய்ய வேண்டும் ((MPS) இடங்கள் வெகு குறைவாக இருப்பதால், அதற்குத் தேவையான பரிந்துரைக் கடிதம் பங்கு அலுவலகத்தில் (பங்கு குருவானவர்) இருந்து பெற்றுக்கொண்டு செல்லவும்
- **பொது விடுமுறை நாட்களில்** பங்கு அலுவலகம், மற்றும் நகராண்மைக் கழகம் (MPS) மூடப்பட்டிருக்கும் வேளையில் திரு. T.சேவியர் அவர்களை தொடர்பு கொள்ளவும். (012-680 0016)

➢ **திருத்தந்தையின் சுற்றுமடல் புத்தகம் விற்பனையில் உள்ளது**. **"மகிழ்ந்து களி கூருங்கள்": புத்தகம் ஒன்றின் விலை ரிம**: 3.00 **வாங்கிப் பயனடையுங்கள்**.

**திருமண அருளடையாளக் கொண்டாட்டம்**
**டேனியல் & ஹம்சவள்ளி 01-09-2018** பகல் 3.30 மணி

இன்று திருப்பலியை வழிநடத்திய திருவழிபாட்டுக் குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்:

➢ **170 ஆன் ஆண்டின் நிறைவு - கா:.பி டேபிள் - "கார்னர் ஸ்டோன் புத்தகம் - பங்கு மக்கள்** 5 **புத்தகங்கள் அடங்கிய பொட்டலத்தை எடுத்துச்சென்று வெளியில் விற்பனை செய்யலாம். பணத்தைப் பிறகும் செலுத்தலாம். இதற்காக ஆலயத்தின் வெளியே அமைக்கப்பட்டிருக்கும் மையத்தை நாடுங்கள்.**

➢ **ஏழைகளுக்கான பணிக்குழு (ஏழைகளின் ஆலயம், ஏழைகளுக்கானது - திருத்தந்தை பிரான்சிஸ்) ஏழைகள் மற்றும் உதவி தேவைப்படுவோருக்கான இந்தப் பணிக்குழு அண்மையில் நம்முடைய பங்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூடுதல் விவரங்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும். நன் கொடைகள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான காலியான வீட்டை யாராவது கொடுத்து உதவ முன்வந்தால் பெரிதும் வரவேற்கிறோம். தொடர்புக்கு: பங்கு அலுவலகம் மற்றும் ஸ்டீபன்** டயோனிஸ் அப்பு **(016-611 0681)**

➢ **புனித மேரி கிண்டர்கார்டன் பாலர் பள்ளிக்கான சின்னம் வரையும் போட்டி - ஜலான் லீ சாம் அனைத்து மறைக்கல்வி மாணவர்களையும் இதில் கலந்து கொள்ள அழைக்கின்றோம். கல்வி, அன்பு, அமைதி ஆகியவற்றின் அடிப்படையில் சின்னம் அமைய வேண்டும். வெற்றியாளர்களுக்கு பரிசுகள் உண்டு. இதற்கான விண்ணப்ப படிவங்களை பங்கு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இறுதி நாள்**: 16-09-2018

➢ **அனைத்து இளையோரின் கவனத்திற்கு: "உங்களின் பணம் உங்களுக்கு வேலை செய்யட்டும் - விவேகத்தோடு நடந்துகொள்ளுங்கள்" பணம் அவசியம் தான்! உங்களின் வாழ்க்கை, வேலை, எதிர்காலம் அனைத்தையும் பணம் தீர்மானிக்கிறது என்பதை தெரிந்துகொள்ளுங்கள். இதைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள: தொடர்புக்கு: கிளென்** 010- 272 7169
**நாள்: நேரம்:** 08-09-2018 **(சனிக்கிழமை) காலை** 10.00- 12.00 **வரை**
**இடம்: விவிலிய அறை**

➢ **அதிச ஒருங்கிணைப்பாளர் குழு கூட்டம் 28-08-2018 இரவு 8.00மணி - அனைத்து அதிச பொறுப்பாளர்கள், பணிக்குழுக்களின் பொறுப்பாளர்கள் அவசியம் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றீர்கள்.**

➢ **கணினி அனுபவமுள்ளவர்கள் தேவை :** தமிழ் திருப்பலி நேரத்தில் LCD இயக்க கணினி அனுபவமுள்ளவர்கள் தேவைப்படுகிறார்கள். தொடர்புக்கு : பங்கு அலுவலகம் அல்லது கப்ரியேல் : 010 367 6954 / டேவிட் அலிமுத்து 0139326747

- **குருவானவர்களின் இல்லசந்திப்பு:**
  **ஆகஸ்ட் மாதம் சோன்** 13 **(செனவாங்) சோன்** 14 **(தாமான் துவாங்கு ஜபார்)**
- **கேரளா மாநிலத்தின் மீட்புப் பணிக்காக இரண்டாவது காணிக்கை செப்டம்பர் 8/9 தேதி திருப்பலிகளில் எடுக்கப்படும்.**
- **காடோங் அன்னை வேளாங்க**ண்ணி**சிற்றாலயத்தின் திருவிழா** 7-9 **செப்டம்பர்** 2018
  7-09-28 **மாலை** 7.00 **மணி** : **செபமாலை/திருமணி ஆராதனை / கொடியேற்றம் / திருப்பலி**
  08-09-2018 **மாலை** 6.00 **மணி**: **செபமாலை/திருப்பலி/தேர்ப்பவனி / நற்கருணை ஆசீர்**
  09-09-2018 **காலை** 10.30 **திருவிழா திருப்பலி**
- **F.I.R.E Conference 2018 புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம், /இரட்சகர் சபை யினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது நாள்**: 31-08-2018 - 02-09-2018 **வரை; தொடர்பு**: 018-210 3908 **ஆட்ரி** 016-337 6120
- **சோய்ஸ்-ஆங்கிலம்((APC)** 5 - 8 **அக்டோபர் (வெள்ளி-ஞாயிறு) தொடர்புக்கு**: choiceklrecruitment@gmail.com <mailto:choiceklrecruitment@gmail.com>
- **அருள்திரு ஜோர்ஜ் அவர்கள்** 31-08-2018 - 04-09-2018 **வரை விடுமுறையில் இருப்பார்**.
- **அருள்தந்தையர்களின் ஆண்டுத் தியானம்**: **அருள்திரு. ஜோர்ஜ்** - 18-21 **செப்டம்பர்**
  **அருள்திரு சேவியர் அண்ட்ரூ** 23-28 **செப்டம்பர்**
  **இவர்களுக்காக நாம் தொடர்ந்து செபிப்போம்.**